

கலாபூஷணம் திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் அவர்களின்

# இசைவாழ்வும் பணியும்



கலாபூஷணம் திரு எல். திலகநாயகம் போல் அவர்களின்

## ஞாபகார்த்தக் கையேடு

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் திரு. எல் திலநாயகம் போல் அவர்களின்
10ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக
13.12.2019 அன்று
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில்
நிகழ்த்தப்பட்ட

# "திலகார்ப்பணம்"

நிகழ்வின் போது வெளியிடப்பட்டது



தொகுப்பு :
கலாவித்தகர் திருமதி. குமுதா உமாகாந்தன்
ஆசிரியர்
யா/ சென் ஜோண்ஸ் கல்லூரி &
"சோமராகம்" இசைமன்றம்
நல்லூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னுரை

செந்தமிழ் செவ்விசைப்பாக்களை தனது இசைக்கச்சேரிகளில் பிரதானமான உருப்படிகளாகக் கொண்டு இசைத்து வந்தவர் **"இசைச்செம்மல்" சங்கீதபூஷணம். திரு. எல். திலகநாயகம் போல்** அவர்கள். அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவாக நிகழ்த்தப்படும் **"திலகார்ப்பணம்"** நிகழ்வு இம்முறை 13.10.2019 வெள்ளிக்கிழமை அன்று நிகழ்த்தப்படுகின்றது. இந்நிகழ்வில் மூத்த வயலின் இசைக்கலைஞரும் எனது குழுவினை நன்கறிந்தவருமாகிய **கலாபூஷணம் திருமதி. தர்மபூபதி** சிதம்பரநாதன் அவர்களை கௌரவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப சாதனங்களின் மிகையான பாவனை குருவுக்கும் சீடனுக்குமான உறவை அற்றுப் போகச் செய்து வரும் இக்கால கட்டத்தில்; குருவின் தேவை என்பது முக்கியமானதாகும். ஆத்மார்த்தமான இசைக்கலை காதால் கேட்டும், அறிந்தும் எமது மனோதர்மத்தை அதிகரிக்க வேண்டிய ஒரு கலை எனினும், ஒரு தக்க குருவின் முன்னிலையில் இசையின் அடிப்படைகளைக் கற்கின்ற போது மட்டுமே சாஸ்திரம் பிசகாததும், தெளிவானதும், ஆழமானதுமான இசைக்கலையை அறியமுடியும். இதனை இன்றைய மாணவர் சமுதாயத்திற்கு எடுத்தியம்பி, எனது இசைக்குருவாம் **"திலகனுக்கு"** அரப்பணம் செய்யும் **"திலகார்ப்பணம்"** எனும் இந்நிகழ்வில் மூத்த இசைக்கலைஞர்களுள் ஒருவராகத் திகழும் ஆங்கில மொழி மூல இசைப்பட்டதாரியான **திருமதி.த.சிதம்பரநாதன்** அவர்களுக்கு **"இசைத்திலகம்"** எனும் விருதினை அளித்து கௌரவித்து அவர்களுடைய **"இசைவாழ்வும் பணியும்"** என்கின்ற இக்கையேட்டை வெளியிடுவதன் ஊடாக எனது குருவை நினைவு கூர்ந்து அவர் பாதம் பணிகின்றேன்.

இக்கையேட்டைத் தயாரிப்பதற்கு எனக்குப் பரிபூரண ஒத்துழைப்பை நல்கிய கலாபூஷணம் திருமதி. த. சிதம்பரநாதன் அவர்கட்கு மனமுவந்த நன்றிகள். இவ்வாறான சிறந்த இசைக்கலைஞரை கௌரவிப்பதற்கு அவரை இனங்காட்டி அவரைப்பற்றிய விடயங்களை முதலில் எனக்கு விளக்கி வழிகாட்டிய சங்கீத வித்வான் திரு. எஸ். சிவஞானராஜா அவர்களுக்கு எனது மனம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக. அதுமட்டுமன்றி இவரை கௌரவிக்க இருக்கின்றேன், அவரைப்பற்றிய விடயங்கள் தேவை என்று அறிந்தவுடனேயே தனது வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் அவரைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்திலும், தொலைபேசியூடாகவும் தெரிவித்த ஆசிரியை திருமதி. ஜெயானந்தன் அவர்களிற்கு எனது உளம் கனிந்த நன்றிகள்.

அத்துடன் இவ்விழாச் சிறக்க உதவிய எனது குடும்பத்தினர், எனக்கு பக்கபலமாக இருந்துவரும் எனது குருநாதரின் குடும்பத்தினர், மிகக்குறுகிய காலத்தில் இக்கையேட்டை அச்சிட்டு தந்துதவிய JEMFAR பதிப்பகத்திற்கும், எனது மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், பெரியோர்கள், நண்பர்கள் அனைவரிற்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றேன்.

இத்திலகார்ப்பண நிகழ்வும், எனது இம்முயற்சியும் தொடர்ந்தும் நன்முறையில் நடாத்திச் செல்வதற்கு அனைவரும் தத்தம் வழிகாட்டல்களையும், ஆதரவையும் தொடர்ந்தும் தரவேண்டும் எனப் பெரியோர்களை வேண்டி இறைவனதும் என்னை இவ்வுலகிற்களித்த என் அன்னையினதும், எனது குருவினதும், ஆசான்கள் அனைவரினதும் தாள் பணிந்து அவர்கள் அனைவரதும் ஆசிகளுடன் இக்கையேட்டை உங்கள் கைகளில் தவழ விடுகின்றேன்.

திருமதி. குமுதா உமாகாந்தன்
"சோமராகம்" இசைமன்றம்,
யா/ சென்ஜோண்ஸ் கல்லூரி,
இசை ஆசிரியர்.

"சோமராகம்"
323/8D கோவில் வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்
தொ. இல : 021 222 5685



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபூஷணம் திருமதி. தர்மபூபதி சிதம்பரநாதன் அவர்களின் இசைவாழ்வும் பணியும்



பிறப்பிடம் : **கட்டுவன், தெல்லிப்பழை**

பெற்றோர் : **திரு. திருமதி முத்துவேலு பொன்னம்மா தம்பதியர்**

பிறந்த காலம் : **21.03.1939**

இயற்பெயர்: **தர்மபூபதி**

விரதமிருந்து வீரபத்திர வசந்தன் பாடல் பாடி கோலாட்டம் போன்ற ஒரு வித ஆடல் ஆடி மழையை வருவிக்கும் சிறப்புடை ஊர் கட்டுவன், இங்கு சிறுவர் முதல் பெரியவர் வரை வீரபத்திர வசந்தன் (பாடல்) பாடுவர், கதை கூறுவர் இவ்வூருக்கு வந்து செல்வோர் கூட இதனைப் பாடுவர் என்றால் மிகையாகாது. இவ்வாறான இயற்கையாகவே பக்தியும், கலைநயமும் மிக்க கட்டுவன் எனும் ஊரில் பிறந்தவரே தர்மபூபதி அம்மையார்.

### ஆரம்பக்கல்வி

தனது ஆரம்பக்கல்வியை கட்டுவன் ஞானோதயா வித்தியாசாலையில் ஆரம்பித்து தரம் 1 -3 வரை கற்றார். பின்னர் தரம் 3 -5 வரை தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலத்திலும், தொடர்ந்து இடைநிலைக்கல்வியை தெல்லிப்பழை யூனியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியிலும், உயர் நிலைக்கல்வியை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் கற்றார். இவர் தனது பாடசாலைக் காலங்களிலேயே இயற்கையாகவே அமைந்த கலை ஞானத்துடன் தேவாரப் பண்களை பாடியும், இசைப்பாடல்களை இசைத்தும் வந்துள்ளார்.

**இசைக்கல்வி**

பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்த காலத்திலேயே இந்தியாவிலிருந்து வந்த மணி ஐயர் அவர்களிடம் (மாவிட்டபுரம்) இசைக்கல்வியையும் (வாய்ப்பாட்டு) வயலினிசையையும் கற்றார். வடஇலங்கை சங்கீதசபை மூன்றாம் தரப்பரீட்சை வரை சித்தியெய்தியிருந்தார். இதே வேளை பண்ணிசையை குப்பிளான் செல்லத்துரையின் மாணவனாகிய V.T.V.சுப்பிரமணிய ஓதுவாரிடமும் கற்றார்.

இவ்வாறான அடிப்படை இசைக்கல்வியும், இயல்பாகவே அமைந்த இசைஞானமும் பெற்ற இவர் தனது இசைக்கல்வியை தொடர்ந்தும் மேற்கொள்வதற்காக 1957ஆம் ஆண்டு இந்தியா சென்றார். அங்கு வயலின் இசையைப் பிரதான பாடமாகக் கொண்டு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து கற்றார்.

இசைப்புயல் M.M தண்டபாணி தேசிகர் வாழ்ந்த, கற்பித்த காலம் என்பது மிகச் சிறப்புடையது. அக்காலத்திலேயே பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்டார். அக்காலத்தில் இந்தியாவில் கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை. துவாரம் வெங்கடசாமி நாயுடு, மைசூர் சௌடைய்யா ஆகிய மூவரும் திரிரத்தினங்களாகப் பிரகாசித்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறான சிறப்புமிக்கவர்களுள் ஒருவரான கும்பகோணம் ராஜமாணிக்கம்பிள்ளை அவர்களிடமும் அவர்களின் மாணவன் T.S சம்பந்தபிள்ளை அவர்களிடமும் வயலினிசையைக் கற்றார். அத்துடன் S. ராஜகோபால்பிள்ளை, மைலம், வஜ்ரவேல் முதலியார், M.M தண்டபாணி தேசிகர், அவர்களின் சகோதரர் T.N.சிவசுப்பிரமணியபிள்ளை போன்றோரிடம் அங்கு இசையைக் கற்றார்.

பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் Dr. சிங் என்னும் தாவரவியல் பேராசிரியர் இசையால் தாவரங்கள் செழித்து வளரும் எனும் ஓர் ஆய்வை மேற்கொண்டார். இதற்கு தெரிவு செய்யப்பட்ட இசைத்துறை மாணவர்களுள் இவரும் ஒருவர். அதில் இவர் வயலின் இசையை இசைத்தார். ஏனையோர் பாடினர். இது பின்னர் குறும்படமாக வெளிவந்து சிறப்புப் பெற்றது.

இதுமட்டுமன்றி பல்கலைக்கழகத்தில் நடைபெறும் விழாக்களில் தனி இசை, குழு இசை என்பவற்றிற்கு வயலின் இசைத்துள்ளார். பல்லிய நிகழ்ச்சியில் இணைந்தும் வயலின் இசைத்துள்ளார். இவ்வாறு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தனது இசைப்புலமையை வெளிப்படுத்தியது மட்டுமன்றி அங்கு வெளிநாட்டு மாணவர் ஒன்றியச் செயலாளராக இருந்து தனது ஆளுமையையும் வெளிப்படுத்தினார்.

1962ஆம் ஆண்டு சங்கீத பூஷணம் பட்டம் பெற்றதன் பின்னர் தந்தையின் வேண்டுகோளிற்கிணங்க (Bachelor of Music) இசைப்பட்டதாரி என்பதற்கான கல்வியை தொடர்ந்து இருவருடங்கள் மேற்கொண்டார். L.P.K.R ராமநாதன் செட்டியார் அவர்கள் இக்கற்கை முறையை கொண்டுவந்தார். அவரின் வழிகாட்டலின் கீழ் பல ஆங்கிலமொழி மூல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைநூல்களைக் கற்றுத்தேர்ந்தார். ஆங்கிலமொழி மூலமாகவே இவருடைய சங்கீத அறிமுறைக்கல்வி இடம்பெற்றிருந்தது. இந்த வகையில் அப்பல்கலைக்கழகத்தின் முதலாவது இசைப்பட்டதாரியாக 1963ஆம் அண்டு வெளியேறினார். அவ்வாறு முதலாவது இசைப்பட்டதாரி என கூறிக் கொள்வதில் அவர் பெருமையடைவதுடன் நாமும் பெருமிதம் அடைகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணவாழ்வும் சிறப்பும்**

1964ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய பின் திரு. திருமதி கந்தையா மீனாட்சி தம்பதியினரின் மகன் வைத்தியர் திரு. சிதம்பரநாதன் அவர்கள் கரம் பற்றி தனது இல்லற வாழ்வை ஆரம்பித்தார். அதன் பயனாக வாசுகி, கௌசலா, எனும் இரு பெண் குழந்தைகளும். ஞானகணேசன் எனும் ஒரு ஆண்குழந்தையையும் பெற்று இனிதே வாழ்ந்து வந்தார். அவர்கள் மூவரும் இயல்பாகவே தமது தாயின் இசை ஞானம் கைவரப் பெற்று பாடும் ஆற்றல் பெற்றவர்கள். பெண்கள் இருவரும் இசை, பண்ணிசை கற்றதுடன் நாடகமும் அரங்கியல் பரீட்சைகளிலும் சித்தியெய்தியிருந்தனர்.

அத்துடன் மூவரும் கல்வியில் உயர்ந்து பட்டதாரிகளாக விளங்கினர். இன்று இரு பெண் பிள்ளைகளும் இறைவன் காலடியில் சேர்ந்திட, மகன் ஞானகணேசன் அவர்கள் லண்டனில் கணனித்துறையில் உயர் கல்வியை முடித்து அங்கேயே தொழில் பார்த்து சீருடனே வாழ்ந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில்

1964ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய பின் தனது இல்லற வாழ்வில் 9 ஆண்டுகள் திழைத்திருந்தார். எனினும் ஒருவரின் இசைப்புலமையை கட்டிப்போடுதல் முடியாது என்பதற்கிணங்க மன்னாரில் துணைவருடன் வாழ்ந்த காலத்தில் இசை நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், நாடகங்கள் என்பவற்றிற்கும் இசை நிகழ்ச்சிகளிற்கும் வயலினிசை இசைத்து வந்தார்.

1972ஆம் ஆண்டு அரச தொழிலாக இசை ஆசிரியப்பணி அரம்பித்தது. முதற்தடவை ஆசிரியப்பணி ஒரே நேரத்தில் 4 பாடசாலைகளில் ஆரம்பித்தது.

1. மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி
2. சென். சேவியர் புனித கன்னியர்மடம் பெண்கள் பாடசாலை
3. சென். சேவியர் ஆண்கள் பாடசாலை
4. அல். அசார் இஸ்லாமியக் கல்லூரி என்பவையே அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து 1974 – 1975 இல் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை தொடர்ந்தார். அதனைப் பூர்த்தி செய்ததன் பின்னர் கண்டாவளை அரச தமிழ்க்கலவன் பாடசாலை, ஏழாலை மகா வித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி என தொடர்ந்து 25 ஆண்டுகள் ஆசிரியப் பணி தொடர்ந்தது.

இதன் பின்னர் Dr.மொன்சூர் காலத்தில் சங்கீதபூஷணம் எஸ்.கணபதிப்பிள்ளை அவர்களிடம் ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கு தகுந்த விரிவுரையாளரை வினவ; கணபதிப்பிள்ளை அவர்களும் தர்மபூபதி அம்மையாரின் புலமையை சிபார்சு செய்தார். அதன்படி 1987-1997 வரையான காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை விரிவுரையாளராக சிறந்த முறையில் கடமையாற்றினார். எனினும் தனது குறித்த வயதை அடைவதற்கு முன்னரே தனது தனிப்பட்ட விருப்பின் பேரில் தனது பணியிலிருந்து 1997ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். இவர் ஒரு சிறந்த வயலின் வித்துவான் என்பதை விட சிறந்த இசை ஆசிரியராக, இசை விரிவுரையாளராகத் திகழ்ந்தமை பலராலும் போற்றப்படுகின்றது.

தான் பாடசாலையில் கற்பிக்கும் காலத்தில் பல மாணவர்களை பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு பெறச் செய்ததுடன் போட்டிகளில் பங்குபற்றச்செய்து பரிசிலும் பெறச் செய்தார். தேசியமட்டம் வரை இவரது மாணவர்கள் வெற்றி வாகை சூடியமை பெருமைக்குரிய விடயமாகும். ஆசிரிய மாணவர்களை கொண்டும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்துவித்ததுடன் தானும் அவர்களிற்கு வயிலின் இசைத்து நிகழ்ச்சிகளை மெருகேற்றி வந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இசைப்பணி**

1986 – 2000ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல இசை அரங்குகளில் பங்கேற்று வந்துள்ளார். ஆசிரியராக, விரிவுரையாளராக கடமையாற்றிய போதும் தனது வீட்டிலும் பிரத்தியேகமாக வயலின் இசைக்கலையைக் கற்பித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். அத்துடன் அறிமுறை அறிவு மிக்க இவர் தன்னிடம் இசையைக் கற்காத மாணவர்களிற்கும் தன்னாலான உதவிகளைச் செய்து தனது ஞானம் மற்றவரும் பெறச் செய்வார். தன்னிடம் இருந்த நூல்களை உசாத்துணையாக பயன்படுத்தக் கொடுத்துதவுவார். ஆங்கில புலமை மிக்க இவர் ஆங்கில மொழியிலிருந்த நூல்களை தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தும் விளக்கம் கொடுத்தும் மாணவர்களிற்கு உதவுவார்.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய "துர்க்காபுரம்" இல்ல மாணவர்களிற்கு தானே இசையைக் கற்பிக்க விரும்பி சிலத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன் பிரகாரம் அவரும் அதற்கிணங்கவே எதுவித பணமும் எதிர்பாராது கிட்டத்தட்ட 20 வருடங்களாக பண்ணிசை, இசை என்பவற்றைக் கற்பித்து வந்தார். இதன் மூலம் அவ்வில்லத்து மாணவர்கள் இசைத்துறையில் மிளிர்ந்ததுடன், சிலர் இசைப்பட்டதாரியாக வெளியேறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் நல்ல முறையில் பண்ணோடும், இராகம், சுருதி தவறாதும்; தேவாரங்களையும், பஜனைப் பாடல்களையும் ஆலயத்தில் பாடி வந்துள்ளனர். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி "இசைத்தாய்" எனும் விருதினை வழங்கி கௌரவித்தமை, அவ்வில்ல மாணவர்களுக்கு அவர் ஆற்றிய சேவைக்குக் கிடைத்த பேறாகும்

வட இலங்கை சங்கீத சபையில் திரு. பொன்னம்பலம் செயலாளராக இருந்த காலத்தில் பாடத்திட்டம் வகுக்கும் குழுவில் இடம் பெற்று பாடத்திட்டம் வகுத்துக் கொடுத்தார். வினாத்தாள் மதீப்பீட்டாளராகவும், விளங்கினார். அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரங்களிற்கான வினாத்தாள்களையும் தொகுத்து மேற்பார்வையிட்டு ஒழுங்குபடுத்திக் கொடுத்தும் வந்துள்ளதுடன், செயன்முறைப்பாட பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளார்.

யாழ் பல்கைலக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராகவும், வெளிவாரி பரீட்சைகளின் பரீட்சகராகவும் மிக நீண்ட காலம் திகழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தானே இயற்றிய பாடல்களுக்கு தானே இசையமைத்தும், சிறுவர் பாடல்கள் பலவற்றிற்கும் இசையமைத்தும் கொடுத்துள்ளமை குறிப்பிடதக்கது. உதாரணமாக

- "சின்னச்சின்ன கன்றுக் குட்டி" எனும் அழவள்ளியப்பாவின் பாடல்
- "தம்பி தம்பி சிறு தம்பி" எனும் அழவள்ளியப்பாவின் பாடல்
- "டக் டக் சத்தம் போடுமாம்"
- "பட்டாம்பூச்சிபட்டாம்பூச்சி எங்கே போகிறாய்"

எனும் பாடல்களையும் குறிப்பிடலாம்.

ஆலயங்கள் மீதும் பாடல்களைப் பாடியுள்ளார். உதாரணமாக தெல்லிப்பளை துர்க்கையம்மன் மீது பீம்பிளாஸ் ராகத்தில் **"மாரிபொழியும் மாரியம்மா"** ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரன் மீது சுத்ததன்யாசி ராகத்தில் **"ஒட்டிசுட்டான் ஈஸ்வரனே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நின் பட்டு மலர்ப்பாதம் பணிந்தேனே"** போன்ற பாடல்களைக் கூறலாம். தான் இயற்றி இசையமைத்த பல பாடல்களுக்கு ஸ்வரப்படுத்தியும் மாணவர்களுக்கு கொடுத்துள்ளார்.

எனினும், துர்ரதிஷ்டவசமாக போரக்காலச் சூழவில் இழந்துவிட, எம்மால் பெறமுடியாதுபோய்விட்டது. இது எம் தமிழருக்குக் கிடைத்த சாபக்கேடாகும்.

தெல்லிப்பளையில் **"கலை இலக்கியக்களம்"** எனும் ஒரு ஆக்கபூர்வமான செயலரங்கம் நடாத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் வளர்த்து வருகின்றது. இதில் தெல்லிப்பளை தமிழ் பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர் தலைவராக இருந்த காலத்தில் இசைக்குப் பொறுப்பாக இருந்து இசைக்கலையை மேலும் அவ்வூரிற்கு மெருகேற்றப் பாடுபட்டுள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலின் இசைத்த போது...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவருக்கு கிடைத்த பட்டங்களும் கௌரவங்களும்

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று 1962 ஆம் ஆண்டு "சங்கீதபூஷணம்" பட்டம் பெற்று மீள இரு ஆண்டுகள் தொடர்ந்தும் மேலதிகமாகக் கற்று "இசைக்கலைப்பட்டதாரி" ஆனார். மேலும்,

- 1997-**இசைத்தாய்விருது**-தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில்
- 2011 -**சிவத்தமிழ் விருது**-தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில்
- 2013-**இசைஞானமணி**-மாவிட்டபுரம் ப்ருந்தகானசபா
- 2013-**யாழ்மோசைவிருது**-யாழ்.மாநகர சபை
- 2015-**கௌரவமுதலமைச்சர்விருது**-கல்வி,பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,வடமாகாணம்
- 2015-**கலாபூஷணம்விருது**-கல்வி,பண்பாட்டலுவல்கள் அமைச்சு.

போன்ற பட்டங்கள்கிடைத்துள்ளமை அவரின் இசைத்திறனுக்கும் இசைச்சேவைக்கும் கிடைத்த பேறுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







முதலமைச்சர் விருதின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




" கலாபூஷணம் " விருதின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைச்சிறப்பு

இசை நிகழ்வுகளிற்கு வயலின் இசைத்தும், பாடியும், தேவாரப்பண்களை இசைத்தும் வந்துள்ளார். இவைமட்டுமன்றி மேடை நாடகங்களிலும் சிறந்த ஆற்றுகை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.குறிப்பாக 1958ஆம் ஆண்டு இராமாயணம் பாலகாண்டத்தில் இராமர் பாத்திரத்தை ஏற்று நடித்து தமிழறிஞர் ஆர்.பி.சேதுப்பிள்ளை அவர்களால் பாராட்டுப்பெற்றவர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பண்பும்,இசைஞானமும் கொண்ட இவர்; சிறுவயதிலிருந்தே நல்ல பேச்சாற்றலும், மேடைப்பேச்சில் ஆர்வமும் உடையவர். இதனால் இசை சார் சொற்பொழிவுகள், சைவ சமய சொற்பொழிவுகள் என்பவற்றை நிகழ்த்தி வந்துள்ளார். இவைமட்டுமன்றி, நூல் வெளியீடுகளில் நூல் ஆய்வு, நூல் அறிமுகம் போன்றவற்றையும் நிகழ்த்தியுள்ளார். ஆசிரியராகக் கடமையாற்றும் காலத்தில் மாணவர்களின் மனதில் பதியும்வண்ணம் சைவ நற்சிந்தனைகளைக் கூறுவார்.இவரது பேச்சாற்றலால் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோரின் நன்மதிப்பைப்பெற்றவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பெருமை இல்லாத இவர், ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் கற்பித்த அனுபவத்தைக் கூறும் போது ஆசிரிய மாணவர்களிற்குக் கற்பிப்பதை விட சிறிய மாணவர்களிற்கு கற்பிப்பதையே விரும்புவதாக கூறுகின்றார். பல சிறுவர் பாடல்களை ஆக்கியும், அழவள்ளியப்பா போன்றோர் இயற்றிய சிறுவர்பாடல்களுக்கு இசையமைத்துள்ளமையும் இதற்கு சான்று பகர்கின்றன.

வேறு ஆசிரியர்களிடம் கற்கும் மாணவர்களிற்குக் கூட தன்னலம் கருதாது கற்பித்தும், இசை நுணுக்கங்களை விளக்கியும், அறிமுறைப்பகுதியை விளக்கியும் உதவி புரிந்துள்ளமை ஏனைய ஆசிரியர்களிடம் காணமுடியாத ஒரு தன்னலங்கருதாப் பண்பாகும்.


இவர் இயற்றிய பாடல்கள் சொல் நயமும், பக்திச் சுவையும் உடையன. ஏனைய கலைஞர்கள், இசை ஆசிரியர்களுடன் நல்லுறவைப் பேணியவர். இன்றும் பேணிவருபவர். மிக நேர்த்தியான கற்பித்தல் திறனுடைய ஆசானாகத்திகழ்ந்த இவர், எந்த இசைப்பாடலையும் ஆழமாகவும், மிக நுணுக்கமாகவும் கற்பிக்கவும், கற்கவும் வேண்டும் என்று இன்றைய மாணவர் சமுதாயத்திற்குக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நல்லாசானாக, நற்கலைஞராக, நாடக நடிகராக, காத்திரமான பேச்சாளராக, சீரிய நற் பண்புடையவராக எனப் பல கோணங்களிலும் சிறந்து விளங்கும் ஆளுமை மிக்க பெண்மணியாம் தர்மபூபதி அம்மையாரின் இசை, கலை, ஆளுமைச் சிறப்பைப்போற்றி **"இசைத்திலகம்"** எனும் இவ்விருதினை வழங்கி, அவர் பாதம் பணிவோமாக.

**"கலையின்பமே நிலையின்பமாம்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print @ JEMFAR 021 222 4484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org